டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 02.01.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 17 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 162 - Madurai | Online Edition

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

# விவசாயிகளின் நலனை மேம்படுத்த மத்திய அரசு உறுதியுடன் உள்ளது

## பிரதமர் மோடி உறுதி

புது தில்லி, ஜன.1

2025-ம் ஆண்டின் முதல் அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முடிவுகளின் அடிப்படையில், விவசாயிகளின் நலனை மேம்படுத்த மத்திய அரசு முனைப்புடன் உள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி நேற்று மீண்டும் உறுதிபட தெரிவித்துள்ளார்.




சமூக ஊடக எக்ஸ் தளப் பதிவில், பிரதமர் கூறியிருப்பதாவது, ‘விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதில் மத்திய அரசு முனைப்புடன் உள்ளது. நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் விவசாய சகோதர, சகோதரிகள் அனைவரையும் நினைத்து நாடு பெருமிதம் கொள்கிறது. 2025-ம் ஆண்டின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் விவசாயிகளின் வளத்தை மேம் படுத்தும் பணிகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் சில அம்சங்களைத் திருத்த மற்றும் சேர்க்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புது தில்லி, ஜன.1

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், 2021-22 முதல் 2025-26 வரை 69,515.71 கோடி ரூபாய் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மற்றும் வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை 2025-26 வரை தொடர ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த முடிவு 2025-26 வரை நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு இயற்கைப் பேரழிவுகளிலிருந்து பயிர்களை பாதுகாக்க உதவும்.

இது தவிர, இத்திட்டத்தை செயல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மை, இழப்பீட்டைக் கணக்கிடுதல் மற்றும் கோரிக்கைகளை




தீர்த்து வைத்தல் ஆகியவற்றை அதிகரிப்பதற்கும் பெரும் அளவில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளதோடு ரூ.824.77 கோடி தொகுப்பு நிதியுடன் புத்தாக்கங்கள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிதியத்தை உருவாக்கவும் ஒப்புதல் அளித்துள்ளது.

யெஸ்-டெக், விண்ட்ஸ் போன்ற திட்டங்களின் கீழ் தொழில்நுட்ப முயற்சிகளுக்கும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்குமா நிதியளிக்க இந்த நிதியம் பயன்படுத்தப்படும்.

தொலையுணர்வு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மகசூல் மதிப்பீடுகளுக்கு குறைந்தபட்சம் 30% முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. 9 பெரிய மாநிலங்கள் அதாவது ஆந்திரா, அசாம், ஹரியானா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகியவை இந்த

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தொழில்நுட்பத்தைத் தற்போது செயல்படுத்தி வருகின்றன. மத்தியப் பிரதேசம் 100% தொழில்நுட்ப அடிப்படையிலான மகசூல் மதிப்பீட்டை ஏற்றுக்கொண்டுள்ளது.

வட்டார அளவில் தானியங்கி வானிலை மையங்களையும், ஊராட்சி அளவில் தானியங்கி மழைமானி நிலையங்களையும் அமைக்க வானிலை தகவல் மற்றும் வலைப்பின்னல் தரவு அமைப்புகள் (விண்ட்ஸ்) திட்டமிட்டுள்ளன.

விண்ட்ஸ் திட்டத்தின் கீழ், தற்போதைய நெட்வொர்க் எண்ணிக்கையில் 5 மடங்கு அதிகரிப்புடன் ஹைப்பர் லோக்கல் வானிலை தரவு உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கேரளா, உத்தரப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், புதுச்சேரி, அசாம், ஒடிசா, கர்நாடகா, உத்தராகண்ட் மற்றும் ராஜஸ்தான் ஆகிய 9 பெரிய மாநிலங்கள் 'விண்ட்ஸ்' திட்டத்தை




செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. மற்ற மாநிலங்களும் இத்திட்டத்தை செயல்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளன.

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டங்களின் கீழ் அதிகபட்ச பலன்களை அளிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக பிரீமியம் மானியத்தில் 90 சதவீதத்தை வடகிழக்கு மாநிலங்களுடன் மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது.

இருப்பினும், இத்திட்டம் தன்னார்வத் திட்டம் என்பதாலும், வடகிழக்கு மாநிலங்களில் மொத்த பயிரிடப்படும் பரப்பு குறைவு என்பதாலும், நிதி ஒப்படைக்கப்படுவதைத் தவிர்க்கவும், நிதி தேவைப்படும் பிற வளர்ச்சித் திட்டங்களில் மறு ஒதுக்கீடு செய்யவும் நெகிழ்வுத்தன்மை வழங்கப்பட்டுள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சொட்டுநீர் பாசனம் செய்யும் முறையை செயல் விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



காஞ்சிபுரம், ஜன.1

30/12/2024 (திங்கட்கிழமை) பண்டித் ஜவஹர்லால் நேரு வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு நிம்மேலி குழு மாணவர்கள் ஆந்தக்குடிபகுதியில் விவசாயி களுக்கு நீர் பாசனம் மற்றும் நுண்ணீர் பாசனம் அதன் திட்டங்கள் அனைத்தையும் தெளிவாக கூறினர்.

மாணவர்கள் சொட்டுநீர் பாசனம் செய்யும் முறையை செயல் விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர். தெளிப்பு நீர் பாசனம் மற்றும் அதன் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் அதே கல்லூரியின் கீழ்வேளூர் குழு மாணவர்கள் வாழை விதை நேர்த்தி, வாழையில் மேக்ரோப்ரோகேன் மற்றும் மண்புழு உரம் தயாரித்தல், குடிசைத் தொழிலைத் தூண்டும் ப்ரிக்யூட் தொழில்நுட்பம் குறித்த செயல்விளக்கம் மற்றும் துண்டுப்பிரசுரம் வழங்கினர்.

நெல்லில் ஊட்டச்சத்து குறைபாட்டை கண்டறிதல், ஒரு ஒருங்கிணைந்த பண்ணை முறையை விளக்கினார் மழை நீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் அதன் பயன்கள் மற்றும் இறுதியாக விவசாயத்திற்கான பல்வேறு மொபைல் பயன்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.



| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 01.01.2025 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 34 | 38 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 54 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 45 |
| 2 | வெண்டை | 40 | 46 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 15 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 17 | 60 | கேரட் | 50 | 55 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 66 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 70 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 40 | 44 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 28 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 40 | 45 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 85 | 95 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 45 | 69 | இஞ்சி | 46 | 90 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 50 | 55 | 70 | புருக்கோலின் | 120 | 130 |
| 15 | சி.வெங்காயம் | 68 | 72 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 78 |
| 16 | பெ.வெங்காயம் | 37 | 40 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 44 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 110 | 125 | 71A | | | |
| 20 | தேங்காய் | 55 | 60 | | | | |
| 21 | மாங்காய் | 70 | 80 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 42 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 34 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 74 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 40 | 46 |
| 40 | கோவக்காய் | 50 | 56 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 70 | 74 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 45 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ருட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 38 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# வாலாஜா வட்டாரத்தில் நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகளின் விவரங்கள் பதிவேற்றம் செய்வதற்கான பயிற்சி

இராணிப்பேட்டை, ஜன.1

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் வேளாண் உதவி இயக்குனர் கௌ.திலகவதி, தலைமையில், மகளிர் திட்டத்தின்– சமூகவள நபர்களுக்கு (CRPs) நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகளின் விவரத்தினை ஃபார்மர் ரிஜிஸ்ட்ரி (Farmer Registry) என்கின்ற செயலியில் பதிவேற்றம் செய்திட பயிற்சி அளிக்கப்பட்டது.

அரசின் நலத் திட்டங்கள் அனைத்தும் முறையாக விவசாயிகளுக்கு விரைவில் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, மத்திய மற்றும் மாநில அரசால், வேளாண் அடுக்ககம் (GRAINS) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

வேளாண் அடுக்ககம் அமைப்பதற்கு, மூன்று காரணிகளும் மிக முக்கியமானவை. அவை

1. நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் பதிவு விவரம் – Farmer Registry,

2. நில உடைமை வாரியாக புவியிடக் குறியீடு செய்த பதிவு விவரம் – Georeferenced Village map Registry,

3. நில உடைமை வாரியாக மின்னணு பயிர் பதிவு விவரம் – Crop Survey Registry.

**நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் பதிவு விவரம் – Farmer Registry**

மத்திய வேளாண் அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறையின் படி, மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மின்னணு முறையில், விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும், ஆதார் எண் போன்று விவசாயிகளுக்கென தனித்துவமான – அடையாள எண் – வழங்கப்படும். விவசாயிகளின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு அடையாள எண் வழங்கப்படும்.

இனி வரும் காலங்களில், அரசின் (மத்திய மற்றும் மாநில) அனைத்து திட்ட பலன்களும் விவசாயிகளின் தரவுத்தளம் (Farmer Database) அடிப்படையிலேயே வழங்கப்படும்.

நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் பதிவு விவரம் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் அனைத்து துறை பயன்களை ஒற்றை சாளர முறையில் பெறலாம்.

ஒவ்வொரு முறை விண்ணப்பிக்கும் போது ஆவணங்கள் சமர்பிக்க வேண்டியதில்லை. அரசின் நன்மைகள் சரியான பயனாளிக்கு சென்றடைவதை உறுதிப்படுத்திட முடியும்.

விவசாயிகள் நேரடியாக வலைதளத்தில் பதிவு செய்வதால் முன்னுரிமை அடிப்படையில் அரசின் பயன்கள் பெற்றுக்




கொள்ளலாம். ஆதார் எண் அடிப்படையில் குறிப்பாக நெல் கொள்முதல், பேரிடர் நிவரணத் தொகை நிதி, விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடி பணபரிமாற்றம் செய்யப்படும்.

கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் எளிய முறையில் பயிர்க்கடன் பெறும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் இதுவரை அரசிடமிருந்து பெற்ற நன்மைகளை தெரிந்து கொள்ளலாம்.

இனி வரும் காலங்களில், விவசாயிகளுக்கான கௌரவ நிதி, பயிர் காப்பீடு போன்று இதர மத்திய மற்றும் மாநில திட்டங்கள் அனைத்தும் இத்தரவுகளின் அடிபடையிலயே வழங்கப்படும்.

தமிழ் நாட்டில் விவசாயம் மற்றும் விவசாயி சார்ந்த திட்ட பலன்கள் வழங்கும் அனைத்து அரசு துறைகளுக்கும் இத்தரவுகள் வழங்கப்பட்டு, இதன் அடிப்படையிலேயே திட்ட பயன்கள் வழங்கப்படும்.

**தேவையான செயலிகள் மூன்று**

நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவரம் பதிவு செய்திட – Farmer Registry TN, eKYC செய்வதற்காக – Aadhaar Face RD, மின் – கையொப்பம் பெற – e-Hastakshar. இச்செயிலிகளை கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவரம் பதிவு செய்திட, அனைத்து வருவாய் கிராமங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டு நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவரங்கள் ஃபார்மர் ரிஜிஸ்ட்ரி (Farmer Registry) என்கின்ற செயலியில் பதிவேற்றம் செய்யப்படும் என வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்தார்.

இந்த பயிற்சியில் வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர், ஆத்மா திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகள்

தானிய சேதார பூச்சிகளை கட்டுப்படுத்த சில முறைகளை மட்டும் கடைபிடிப்பதன் மூலம் முழுமையாக இவைகளை கட்டுப்படுத்திட முடியாது. ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகளே தானிய சேமிப்புக்கு மிக்க உகந்தது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டு கொண்டுள்ளார்.

1.அறுவடையின் போதே பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்.

2.விளைபொருட்கள் சேமிக்கப்படும் இடத்தின் சுற்றுப்புற சூழ்நிலையை நன்கு பாதுகாத்தல்.

3.விளைபொருட்களின் ஈரத்தன்மையை சரியான அளவில் பராமரித்தல்.

4.விளைபொருட்கள் காயவைக்கும் களங்கள், கோணிப்பை, குதிர்கள் மற்றும் கிடங்குகள் ஆகியவற்றில் பூச்சிக்கொல்லிகள் தெளித்தல்.

5.தானியங்கள் சேமித்து வைத்தபிறகு பூச்சிகள் வரும் முன்னரும் பூச்சிகள் தாக்கிய பின்னரும் பூஞ்சாண கொல்லிகளை தெளித்து கட்டுப்படுத்துதல்.

6.தானியங்களுடன் சில ரக தாவர பொருட்களை கலந்து சேமித்து பூச்சிகளை கட்டுப்படுத்துதல்.

7.ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முறைகளை கடைபிடித்தல்.

8.அறுவடையின் போது பாதுகாத்த விளைபொருட்களை உற்பத்தியாகும் வயல்களில் இருந்து, சேமிப்பு கிடங்கிலிருந்து மற்றும் சேமிப்பு கலன்களில் இருந்தும் பூச்சி, பூஞ்சாணம் தாக்கி இழப்பை அதிகரிக்கின்றன. இதனை தடுக்க மாலத்தியான்




0.1 சதம் அளவில் சேமிப்பு கிடங்கிலும் கலன்களிலும் தெளிப்பது அவசியம்.

மேலும் சுவர், தரை, கதவு, சன்னல், இடுக்குகள், குதிர்கள் இவற்றின் மீதும் மூடைகளை நகர்த்தும்போதும் ஆங்காங்கே பறந்தோ ஊர்ந்தோ சென்று பூச்சிகள் பரவுகின்றன.

விளைபொருட்களை சேமிக்கும் முன்பு கொள்கலன்கள் மற்றும் அறைகளை பூச்சி மற்றும் பூஞ்சாணம் இல்லாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம். சேமிப்பு அறைகளின் துவாரங்கள், சுவர் விரிசல் ஆகியவற்றில் வெடிப்பு அற்றதாக சிமெண்ட் பூசி, சீர் செய்ய வேண்டும். எலி வளை இருப்பின் அதை முற்றிலும் எலி தாக்காமல் சீர் செய்ய வேண்டும்.

சுவர்களை பாதுகாப்பது மிகவும் அவசியம். கதவுகளின் கீழ் பகுதிகள் 25 செ.மீ. வரை இரும்பு தகட்டால் அடைக்க வேண்டும்.




சேமிப்பு அறையின் சன்னல், காற்று வெளியேற்றும் மின்விசிறி பொருத்தியுள்ள பகுதிகள் ஆகியவற்றில் இரும்பு வலை சன்னல்கள் பொருத்த வேண்டும்.

தானியங்களின் ஈரத் தன்மையை பராமரிக்க சேமிக்கப்படும் தானியங்களை சிபாரிசு செய்யப்படும் ஈரப்பதத்திற்குள் காயவைத்து சேமிக்க வேண்டும். பொதுவாக ஈரப்பதம் 8 முதல் 10 சதத்திற்குள் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஈரப்பதம் பூச்சிகளின் இனப்பெருக்கத்திற்கு உகந்ததாக இருப்பது மட்டுமல்லாமல் பூசணங்களின் வளர்ச்சியையும் அதிகப்படுத்துகின்றன. இதனால் தானியங்கள் நிறம்மாறி துர்நாற்றம் ஏற்பட்டு உண்பதற்கு தகுதியற்றதாகிவிடும்.

எனவே, ஈரப்பதத்தைச் சரியான அளவில் வைத்திருப்பது மிகவும் அவசியம் ஆகிறது என்று கூறப்பட்டுள்ளது.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# தைபட்டத்திற்கேற்ற (கேப்பை) கேழ் வரகு சாகுபடி



தற்போது எங்கு பார்த்தாலும் மக்களிடைய சிறு தானிய மோகம் பரவி வருகிறது. குறிப்பாக சர்க்கரை நோயாளிகளுக்கு அருமருந்தாக கேப்பை என்ற கேழ்வரகு உள்ளது. இதனை ஆங்கிலத்தில் (RAGI) என்று அழைக்கப்படுகின்றன. கூடிய விரைவில் அனைத்து நியாய விலைக்கடைகளில் (RATION SHOP) விற்பனை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

அந்த பயிரை எப்படி சாகுபடி செய்து அதிக மகசூல் எடுப்பதற்கான வழிமுறைகளை பார்ப்போம்.

**கேழ்வரகுவின் சிறப்பு அம்சம்**

மிக குறைந்த நீரில் சுமாரான மண்வள த்தில் பூச்சி / நோய் தாக்குதல் இன்றி நிறைவான மகசூலையும் வருமானத்தையும் தரக்கூடிய ஓரே பயிர் இந்த கேழ்வரகு தான். மானா வாரியாகவும் இறவையாகவும் பயிரிடலாம். ராகியில் மற்ற சிறு தானியங்களைவிட 5-20% கால்சியம் உள்ளது குறிப்பிடத் தக்கது. இது FINGER MILLAT எனவும் அழைக்கப்படுகிறது.

**ரகங்கள்**

பையூர்-2, திருச்சி 2, கோ.ஆர் ஏ 14, 15.

**விதையளவு**

ஏக்கருக்கு 4 கிலோ சூடாமானஸ் / டி.விரிடி-யால் விதை நேர்த்தி செய்து விதைக்கலாம்.

**இடைவெளி**

30 X 10 செமீ. ஒரு ஹெக்டோரில் 3.33.330 செடிகள் இருக்க வேண்டும்.

**நுண்ணூட்ட சத்து**

எக்கருக்கு 5கிலோ இடவேண்டும். இரண்டு களை எடுக்க வேண்டும். பூச்சி / நோய் தாக்குதலை அறிந்து அதற்கேற்ப பூச்சி / நோய் மருந்து தெளிக்க வேண்டும். பொதுவாக இலை கருகல் தூர் அழுகல் அடிச்சாம்பல் நோய் தாக்குதல் வரலாம்.

**அறுவடை**

கதிர்கள் பழுப்பு நிறமாக மாறுவது தான் அறுவடைக்கான அறிகுறி. இவ்வாறாக மாறிய கதிர்களை அறுவடை செய்ய






வேண்டும். முதல் அறுவடை செய்த பின் 7வது நாளில் இரண்டாவதாக அறுவடை செய்ய வேண்டும். அதாவது பச்சையாக இருக்கும் கதிரையும் சேர்த்து அறுவடை செய்ய வேண்டும்.

அறுவடை செய்த கதிர்களை ஒரு நாளைக்கு முன்னதாக குவியலாக வைத்து கதிரடித்து புடைத்து சுத்தமாக சாக்குகளில் சேமிக்க வேண்டும். பின்னர் நன்றாக காயவைத்து விற்பனை செய்ய வேண்டும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கயப்பாக்கம் ஊராட்சியில் விவசாயிகளுக்கு பயிற்சி



காஞ்சிபுரம், ஜன.1

காஞ்சிபுரம் மாவட்டம், சித்தமூர் வட்டம், கயப்பாக்கம் ஊராட்சியில் தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, அசோலா வளர்ப்பு, சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு மானியம் பற்றிய பயிற்சி வழங்கல் நிகழ்ச்சி எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர் ஜவஹர்லால் மற்றும் கல்லூரியின் உதவி பேராசிரியர்கள் (விவசாய விரிவாக்கத் துறை) முனைவர் R.ராஜசேரன், முனைவர் A.முஹம்மத் இக்ஷனுள்ளா, முனைவர் எம்.ஆர்.நவீன்குமார், முனைவர் குங்குமசெல்வன், முனைவர் சஸ்மிதா மற்றும் முனைவர் ஏ.இந்துஶ்ரீ (உதவி பேராசிரியர், வேளாண் பொருளாதாரத் துறை) இவர்களின் வழிகாட்டுதலின்படி இளங்கலை 4ஆம் ஆண்டு மாணவிகள் ரா.வெ.ஹேமாவதி, செ.ஶ்ரீவருணி, அ.வெண்ணிலா, சு.கோமதி, கோ.சண்முகப் பரியா, ஜஹ்ணவிதோட்டா, செ.ஜெய வர்ஷினி, வி.மீரா.ஜாஸ்னி, சு.சுமிதா, செ.செந்தமிழ்ச்செல்வி, அ.வினோதினி, க.ரதர்ஷினி ஆகியோர் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். ஊராட்சி மன்ற தலைவர் லோகநாதன்.கே, முன்னிலையில் நடைபெற்றது. பூச்சியியல் துறை பேராசிரியர் D.காமராஜ் 'தேனீ வளர்ப்பு 'என்னும் தலைப்பில் மக்களுக்கு எளிதாக புரியும் படி சிறப்புரை அளித்தார்.

நோயியல் துறை பேராசிரியர் முனைவர் ராஜேஸ்வரி செல்வ ராஜ் ‘காளான் வளர்ப்பு’ பற்றி சிறப்புரை அளித்தார். நுண்ணுயிரியல் துறை பேராசிரியர் முனைவர் அன்புகரசி ‘அசோலா வளர்ப்பு’ பற்றி சிறப்புரை அளித்தார். வேளாண் பொறியியல் துறை பேராசிரியர் முனைவர் ஏ.இந்துஶ்ரீ, சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு மானியம்’ பற்றி சிறப்புரை அளித்தார். விவசாயிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தங்களின் சந்தேகத்தை கேட்டறிந்தனர். இந்த நிகழ்ச்சி விவசாயிகளின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவிற்கு மிகப்பெரிய ஊக்கமளித்தது. தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, அசோலா வளர்ப்பு, சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு மானியம் தொடர்பான விழிப்புணர்வும் தொழில்நுட்ப உதவிகளும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்தது. இது கயப்பாக்கம் ஊராட்சியில் விவசாய முன்னேற்றத் திற்கான ஒரு முக்கிய நிகழ்வாக இருந்தது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.